PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-
வெளிநாட்டு சந்தா 15£ (30 U. S $). தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115 இதழ்: 4 27-1-1989 (ஜனவரி27-பெப்ரவரி 3) பிரதி ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

### திருமறைக் கலாமன்றத்தின் நாடகக் களப்பயிற்சி ஆரம்ப விழாவில் யாழ். ஆயர் தலைமை உரை:

# தமிழ் மக்களின் கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

**"ஈழமண்ணில் கத்தோலிக்க சமயம் வளர்வதற்கு தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகள் பல வழிகளில் உதவியுள்ளமையால், கலையின் பல வடிவங்களையும் அறிந்திருப்பதோடு அவற்றைப் பயன்படுத்தி, பேணிப் பாதுகாக்க வேண்டும்" என்று சென்ற ஞாயிற்றுக்கிழமை (ஜன- 22.) யாழ். திருமறைக் கலாமன்றம் நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து நடத்திய நாடகக் களப்பயிற்சி ஆரம்ப விழாவில் தலைமைதாங்கிய யாழ். ஆயர் குறிப்பிட்டார்.**

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் ஜனவரி 22ஆம் திகதி காலை 9 மணிக்கு நாடகக்களப் பயிற்சி ஆரம்பமானபோது விழாத் தலைவரான யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனர் கலாநிதி அருள்திரு. நீ. மரியசேவியர் அடிகள் தமதுரையில் கலைஞனின் கடமைகளைப்பற்றி எடுத்துக் கூறினர்.

நாடக அரங்கக் கல்லூரியின் செயலாளர் குழந்தை திரு. ம. சண்முகலிங்கம் அவர்கள் பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தினர்கள்.

யாழ். ஆயர் தமதுரையில் திருமறைக் கலாமன்றத்தின் செயல்பாட்டையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார், முழு விபரங்களும் 2ஆம் பக்கத்தில் கலைநிலா, என்ற தலைப்பில் பிரசுரிக்கப்படுகின்றது.

## கிறிஸ்தவ ஒன்றுகூடல்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் இறுதி நாளான தை 25ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் அருள்திரு. எஸ். எம். செல்வரட்ணம் (அ. ம. தி) அடிகளினால் கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான கருத்துப்பரிமாற்றமும் செப வழிபாடும் யாழ். இல 657 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த ஒன்று கூடலுக்கு மெதடிஸ்த திருச்சபையினரும், தென் இந்தியத் திருச்சபைப் போதகரும், கத்தோலிக்க துறவிகளும், அருட்சகோதரிகளும், பெரிய, சிறிய குருமட மாணவர்களும் சமூகமளித்திருந்தனர். மெதடிஸ்த திருச்சபையின் இறையியல் மாணவன் பெஞ்யூஸ் பொன்னையா உரையாற்றுகையில் 'எந்த ஒரு சபையும் தனித்து நின்று கிறிஸ்துவைப் போதிப்பதிலும் பார்க்க, ஏனைய சபைகளோடும் ஐக்கியப்பட்டுப் போதிக்கும் போது உண்மையான கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு சான்று பகர முடியும்" என்று கூறினர்.

தென் இந்தியத் திருச்சபையின் போதகர் வண. ஆனந்தராஜா அவர்கள் "எங்கள் மத்தியில் தற்போது பல சபைகள் உருவாகியுள்ளன. நாங்கள் எங்கள் ஒவ்வொருவருடையவும் வாதத்திறமையினாலும், இறையியல் அறிவினாலும் ஒருவரையொருவர் தரக்குறைவாக நடத்த முற்படுவதனால் எமது அயல் சமயத்தவர் மத்தியில் கிறிஸ்தவ ஒற்றுமைக்கு சாட்சி பகர்வதற்குப்பதிலாகப் பிரிவினை வாதங்களுக்கே சாட்சி பகர்கின்றோம். இந்நிலை மாறி ஒவ்வொருவரும் தாம் வணங்கும் கிறிஸ்துவை தமது ஒற்றுமையான வேறுபட்ட கருத்துக்களுடன் ஒருவரையொருவர் ஏற்றுவாழும் மனப்பான்மையுடன் வாழ்வதன் மூலம் பறைசாற்றவேண்டும்." என்றகருத்தைவலியுறுத்தினர்.

கத்தோலிக்க திருச்சபையின் கருத்துக்களைப் பரிமாறிய புனித சவேரியார் குருமட அதிபர் கலாநிதி எஸ் ஜே இம்மானுவேல் அடிகள் பல சிந்தனைகளை முன்வைத்தார். மேலதிக விபரங்கள் அடுத்த இதழில்.

## பெனஸிருக்கு ஆயரின் வாழ்த்து

லாகூர் புரோட்டஸ்தாந்து ஆயர் டாக்டர் அலெக்சாந்தர் மலிக் அவர்களும், பாகிஸ்தான் திருச்சபைத் தலைவரும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள திருமதி பெனஸீர் பூட்டோவுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

புதிய பிரதமரின் ஆட்சியில் சிறுபான்மையினரோடு நல்லுறவு நிலவும் எனவும் நாடு வளமும் முன்னேற்றமும் அடையும் எனவும் ஆயர் நம்பிக்கை தெரிவித்தார்.

லாகூர் பார்ஸி சமூகத்தினரும் திருமதி பெனஸீருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். பத்திரிகைக்களித்த ஒரு செய்தியில் லாகூர் பார்ஸி சமூகத்தின் தலைவரான திருமதி டி. பி. பண்டாரா சிறுபான்மையினர் முஸ்லீம்களோடு அமைதியாக வாழ்வதில் கரிசனை கொண்டுள்ளதையிட்டு திருப்தி தெரிவித்தார்.

## வெளியீட்டாளருக்கு பயிற்சி

கிறிஸ்தவ அறிவை வளர்க்கும் இந்திய சங்கத்தின் வெளியீட்டு நிறுவனம், ஆடி - ஆவணியில் வெளியீட்டாளருக்கு ஒரு பயிற்சி நடத்தவிருக்கிறது. வெளியிடுதல், விருத்திசெய்தல், சந்தைப்படுத்தல், நிதி நிர்வாகம், மக்களைப் பயன்படுத்துதல், வெளியீடு பற்றிய சட்டங்கள் முதலிய பல விடயங்கள் இப்பயிற்சியில் இடம் பெறும்.

உரைகள் மட்டுமல்லாது, குழு உரையாடல்கள் தனிநபர், செயற்திட்டங்கள், தனி முறை போதனை அமர்வுகள் ஆகியனவும், பயிற்சியில் இடம்பெறும்.

மேற்கூறிய சங்கத்தின் தொடர்பு நிலையமும், வெளியீட்டு நிறுவனமும் நவம்பர் 22-ம் திகதி அமிரித்சார் ஆயர் ஆனந்த சண்டு லால் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் நோக்கம் நூல் வெளியீடுபற்றிய சகல துறைகளிலும், குறுகிய பயிற்சிகளை அளித்து, தொழிற் திறமை அளிப்பதாகும்.



யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நாடகக் களப்பயிற்சிப் பொறுப்பாளர் திரு. பிரான்சிஸ் ஜெனம் உடனிருக்க, இயக்குனர் அருள்திரு நீ. மரிய சேவியர் உரையாற்றுகிறார்.

## தொலைக்காட்சியில் வேதாகமம்

வேதாகமம் 13 பகுதிகளைக் கொண்ட ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியாக தயாரிக்கப்படுகின்றது. கேரளத்தில் திரு. ஜோர்ஜ் வல்லாட்டின்புத்தகத்தைப் பின்பற்றித் தயாரிக்கப்படும் இந் நிகழச்சி தொடக்கத்தில் மலையாளத்தில் இருக்கும். "வேதாகமத்தினூடே ஒரு யாத்திரை" என்றழைக்கப்படும் இத் திரைப்படம் ராஜாங்க அமைச்சரான திரு. எம். எம் ஜேக்கப்பினால் தொடக்கி வைக்கப்பட்டது.

## கட்புல சாதனங்கள் பற்றிய பயிற்சி

சென்னையிலுள்ள சாந்தோம் சமூக தொடர்பு நிலையம் ஜனவரி 17ம் திகதியிலிருந்து பெப்ரவரி 16ம் திகதி வரை "கட்புல செவிப்புல ஆக்கம்" என்பது குறித்து ஒரு பயிற்சியை நடத்துகிறது. ஒலி, ஒளி தொழில் நுட்பங்கள், கதை வசனம் எழுதுதல் போன்றவை இப்பயிற்சியில் இடம்பெறும்.

இப்பயிற்சியில் பங்கு பற்றியோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## மன்னார் மறைவட்டப் புதிய நியமனங்கள்

(1) அருள்திரு. C.S. குரூஸ், O.M.I – பங்குத்தந்தை, வவுனியா
(2) அருள்திரு. P. யேசுராசா – பரிபாலகர், மடுத்திருப்பதி
(3) அருள்திரு. M. சூசைப்பிள்ளை – செயலர், ஆயர் இல்லம், மன்னார்
(4) அருள்திரு. S. ஞானதிக்கம் – புனித சவேரியார் கல்லூரி மன்னார்

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### நம்பிக்கையின் அடையாளம்

''ஒவ்வொரு பிள்ளையும் மனுக்குலத்தின் நம்பிக்கைக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது'' என்று எமது திருத்தந்தை, குறிப்பிட்டதை ஆதாரமாகக் கொண்டு இவ்வாண்டு திருப்பாலத்துவ சபை தினத்திற்கான செய்தியை தேசிய இயக்குநர் விடுத்துள்ளார்.

நம்பிக்கையின் சின்னமான பிள்ளைகள் இன்றைய உலகில் எதிர்நோக்கும் நிலைமைகள் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இயக்குநர் அவர்கள் விளக்கிக் கூறுகின்றார்.

திருப்பாலத்துவ சபையானது சிறுவரின் மறைப் பணிக்கென 1943 ஆம் ஆண்டு பிரான்சிலுள்ள நான்சி நகரின் ஆயரான டி வொபின் ஜான்சன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.

தமது விசுவாசத்தையும், செபங்களையும் காணிக்கைகளையும், அவைமிகவும் தேவைப்படுகின்ற ஏனைய சிறுவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம் ஆண்டவரின் மறைப்பணியாளராக விளங்குமாறு சிறுவருக்கு இச்சபை ஆர்வமூட்டுகிறது. இச்சபை பிரான்ஸ் நாடுமுழுவதும், வெளிநாடுகளிலும்கூட வெகுவிரைவிற் பரவியது. இவர்கள் தமது தியாகங்கள் மூலம், பல தடவைகளில் மிகுந்த வீரத்துடன், உலகம் முழுவதிலுமுள்ள உதவி தேவைப்படும் ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவி புரியத் தொடங்கினர். தம்மிலும் வாய்ப்புக் குறைந்த சகோதரர்களுக்கு அவர்கள் மிகுந்த நன்மை புரிந்த காரணத்தினால் இச்சபை விரைவிற் பாப்பரசரின் மறைபரப்பு சபையாக ஆக்கப்பட்டது.

இலங்கையிலும் இச்சபையின் தேசியக் கிளையொன்று உளது. அநேக பாடசாலைகளிலும், மறைக் கல்வி வகுப்புகளிலும இதன் கிளைகள் இருக்கின்றன. ஆனால் எல்லா இடங்களிலுமில்லை. உங்கள் பாடசாலையிலோ மறைக்கல்வி வகுபபிலோ இச்சபையின் கிளை இல்லாவிட்டால், உங்கள் அதிபர் அல்லது உங்களுக்கு விருப்பமான ஆசிரியர் அல்லது உங்கள் பங்குத் தந்தையிடம் ஒரு கிளையை அமைக்குமாறு கேளுங்கள். இதில் அதிக கஷ்டமில்லை.

நீங்கள் இச்சபையின் அங்கத்தவர்களாகி, மறைபரப்பு நாடுகளுக்காகவும் நற்செய்திப் பணிக்காகவும் செபிக்கவேண்டுமென்றும், கிறிஸ்துவை அறியாத பிறருடன் உரையாடி எம் விசுவாசத்தைப் பற்றி உங்களது அன்பு, கரிசனை ஆகியவற்றின் அடையாளமாக உலகெங்குமுள்ள ஏழைச்சிறுவருக்காக பணம், பொருள் ஆகியவற்றை அளித்துதவ வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களைப் போன்ற சிறுவர்கள் ஆண்டு தோறும் சேகரித்த நிதியைக் கொண்டு இச்சபை ஆயிரக்கணக்கான ஏழைச்சிறுவர்கள் வாழ்வதற்கு உதவி செய்கின்றது. அனாதை இல்லங்களும் குழந்தை மடங்களும, அங்கவீனமுற்ற சிறுவர்க்கான இல்லங்களும் தாபரிக்கப்படுகின்றன. பொருளாதாரக் கஷ்டங்களினாற் பாடசாலை செல்லமுடியாத, புத்திக்கூர்மையுள்ள பிள்ளைகளுக்குக் கல்விககு வழிசெய்யப்படுகின்றது. உணவு, மருந்து முதலிய அடிப்படைத் தேவைகள் இல்லாதோருக்கு உதவி செய்யப்படுகிறது. பெருந்தொகையான அகதிச்சிறுவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள்.

எங்கள் நாட்டிலும்கூட எத்தனையோ சிறுவர் வறுமை, போஷாக்கின்மை, பெற்றோரின் அன்பு ஆதரவு கிடையாமை முதலிய காரணிகளால் துன்புறுகின்றனர். இன்று ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பல இடங்களில் அன்பும் ஆதரவுமின்றி, உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத்தேவைகள் இல்லாமல், பொழுதுபோக்குவசதிகள் இல்லாமல் வாழ்கின்றனர். நம்பிக்கையின் சின்னமான பிள்ளைகளின் மாண்பினை உணர்ந்து அவர்களின் அவல நிலையைப் போக்குவதற்கு முயலும் சிறுவர்களாகிய உங்களது பணி இன்றைய நாட்களில் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே சிறுவர்களே முன் வாருங்கள். மனுக்குலத்துக்கு நம்பிக்கை ஊட்டுங்கள்.

திருத்தந்தையின் உலக சமாதான தினச் செய்தி:

## பிற நாடுகளில் குடியேறியிருக்கும் சிறுபான்மையினர் தம் மக்களுக்காக குரல் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்

11. ஒவ்வொரு உரிமைக்கும் அதனோடு கூடிய கடமைகளுண்டு. தாம் வாழும் நாட்டையும் சமுதாயத்தையும் பொறுத்தமட்டில் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் சில குறிப்பிட்ட கடமைகள் உள்ளன. முதற்கண், அவர்கள் எல்லாக் குடி மக்களையும்போல் பொதுநன்மைக்காக ஒத்துழைக்கும் கடமை அவர்களுக்குண்டு.

சகல மக்களதும் வளமான வேறுபாட்டைப் பிரதிபலிக்கும் அமைதி நிறைந்த ஓர் உலகைக் கட்டியெழுப்புவதில் சிறுபான்மைக் குழுவினர் தமக்கேயுரிய பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

இரண்டாவதாக, ஒரு சிறுபான்மைக்குழு, தன் அங்கத்தவர் ஒவ்வொருவரதும் சுதந்திரத்தையும் மகத்துவத்தையும் பேணி, ஒவ்வொருவரின் தீர்மானங்களையும் அவர்களுள் ஒருவர் பெரும்பான்மையினரின் கலாசாரத்தைப் பின்பற்ற விரும்பினுங்கூட—மதிக்கக் கடமைப்பட்டுள்ளது.

பெரும் அநீதிகள் இழைக்கப்படும் சந்தர்ப்பங்களில், தமது சொந்த நாட்டில் ஒடுக்கப்பட்டு, தமது குரல் கேட்கப்படாத நிலையில் வாழும் அங்கத்தவர்களின் நியாயமான உரிமைகளுக்காக பிறநாடுகளில் குடியேறியிருக்கும் அக்குழுவைச் சேர்ந்தவர்கள் குரல் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கலாம். அவ்வேளைகளில், முக்கியமாக சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி திட்டவட்டமான தகவல்களை பெறுவது கடினமாயிருக்கும்போது, மிகுந்த விவேகமும், விளக்கமான பகுத்துணர்வும் தேவைப்படுகின்றது.

சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த சகல அங்கத்தவரும், அவர்கள் எங்கு இருப்பினும், வரலாற்று வளர்ச்சி, தற்கால உண்மைநிலை ஆகியவற்றின் அடிப்படையில் தமது கோரிக்கைகள் எந்த அளவுக்கு நியாயமானவை என்பதை மனச்சாட்சியின்படி நிர்ணயிக்கவேண்டும். இவ்வாறு செய்யாவிடில், வருங்காலத்துக்குரிய எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி கடந்தகாலத்தில் சிறைப்பட்டு வாழும் ஆபத்து ஏற்பட ஏதுவாகும்.

12. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

மேற்கூறப்பட்ட சிந்தனைகளிலிருந்து ஒருவர் நீதியும் சமாதானமுமுள்ள ஒரு சமுதாயத்தின் உருமாதிரியைக் கண்டுணரலாம். இதை அமைப்பதற்கு தம்மாலான சகல முயற்சிகளையும் செய்து பங்களிக்க அனைவருக்கும் பொறுப்புண்டு. இத்தகைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு, வெளிப்படையான பாரபட்சத்தை மட்டுமல்லாது குழுக்களைப் பிளவுபடுத்தும் சகல தடைச்சுவர்களையும் அகற்றவேண்டுமென்ற முழுமனதுடன் கூடிய அர்ப்பணம் தேவை, நீதிக்கேற்பவும் சமுதாயத்தின் சகல பகுதியினரதும் நியாயமான அபிலாஷைகளை மதித்தும் செய்யப்படும் ஒப்புரவே பின்பற்றப்படவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அமைதியான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் பொறுமையோடு எடுக்கப்படும் முயற்சி, சகல மக்களையும் இணைக்கும் அன்பில் வலுவும் நிறைவும் பெறுகின்றது. ஒரே தோற்றுவாயையும் இறுதிக்கதியையும் கொண்ட, வேறுபாட்டினால் வளமுற்ற மனிதகுலத்திற்கு எண்ணற்ற விதங்களில் செய்யப்படும் உருப்படியான பணிகள்மூலம் இந்த அன்பை வெளிப்படுத்த முடியும்.

சிறுபான்மைக் குழுக்களின் நிலைபற்றி ஒவ்வொரு மட்டத்திலும் இன்று காணப்படும் அதிகரித்த உணர்வு, அடுத்த தலைமுறைகளுக்கும், சிறுபான்மைக் குழுக்களின் அபிலாஷைகளுக்குமே எமதுகாலத்தில் ஒரு நம்பிக்கைச் சின்னமாக அமைந்துள்ளது.

(தொடரும்)

## கலைநிலா

### நாடக களப்பயிற்சி ஆரம்பவிழா

திருமறைக் கலாமன்றம் நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து நடத்தும் ''நாடக களப்பயிற்சி'' ஆரம்பவிழா 22-1-89 ஞாயிறு காலை 9 மணிக்கு மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெற்றது. விழாவின் தலைவரான யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். நாடகப்பிரிவு பொறுப்பாளரான திரு அ பிரான்சிஸ் ஜனம் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. ஆயர் அவர்கள் தமது உரையில் கூறியது:-

தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகள் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும். கத்தோலிக்க சமயம் வளர்வதற்கு கலை பல வழிகளில் உதவியுள்ளமையால் கலையின் பல வடிவங்களையும், அறிந்திருப்பதோடு அவற்றினை பயன்படுத்தி மக்களுக்கு நன்நெறிகளை எடுத்துக்கூறவும் சமயத்தை வளர்க்கவும், கலைஞர்கள் உழைக்கவேண்டும். இதற்காக திருமறைக்கலாமன்றம் திட்டமிட்டு செயல்படுவதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். நாடக களப்பயிற்சி இளம் சமுதாயம் கலைகளைப் பற்றி அறிவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பயன்படும். நாம் மற்றயோருடன் இணைந்து தமிழ்க்கலைகளை வளர்க்க பாடுபடவேண்டும்''. என்றார்

தொடர்ந்து நாடக அரங்கக் கல்லூரியின் செயலாளர் குழந்தை திரு ம. சண்முகலிங்கம் அவர்கள் தமது உரையில்:

''கலைகளைப் பற்றி அறிவதற்கு பயிற்சி மிகவும் அவசியம். நாடக களப்பயிற்சி நல்ல கலைஞனைத்தான் உருவாக்காவிட்டாலும், நல்ல மனிதனை உருவாக்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயுறவுமில்லை. இது நமக்கு அனுபவம் தந்த முடிவு. பயிற்சி பெறுவோர் அனைவரும் தம்முள் நல்ல உறவுகளை ஏற்படுத்தி தம்மை நல்ல மனிதருக்கவும், கலைஞருக்கவும் முயற்சிக்கவேண்டும். நாம் நமது மண்ணோடு இணைந்த கலைகளின் ஊடாக நமது மண்ணின் கலைகளை வெளிப்படுத்த வேண்டும். அதுதான் மிகவும் சிறந்தது. அத்தோடு மேல் நாட்டாரின் சிறந்த கருத்துக்களையும், சிந்தனைகளையும், கலை சம்பந்தமான உயர்ந்த எண்ணங்களை எமது மண்ணின் கலைகளோடு இணைத்து புதிய கலை வடிவங்களை உருவாக்குதல் வேண்டும். அதன்மூலம் எமது கலையை சர்வதேச தரத்திற்கு கொண்டு வருதல்வேண்டும்'' என்றார்.

திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருள்திரு நீ. மரியசேவியர் அவர்கள் ''இறைவனைக் கலை வடிவத்தில் காண்பவன் நான். இறைவனிடம்ஊற்றெடுக்கும் கலை, அவனிடத்தில் மீண்டும் திரும்பிச் செல்லவேண்டும். அதைச் செய்விக்க வேண்டிய கடமையிலிருந்து கலைஞன் தவறக்கூடாது'' என்றார். பொதுச் செயலாளர் திரு. V.J. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் மன்றத்தின் செயல்திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கினார். கலைஞர்கள் அனைவரும் இறைவனால் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கொடையை சமுதாய வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இறுதியாக திரு. கி. பி. பேர்மினஸ் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது.

நாடகக்களப்பயிற்சி வகுப்பு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. S. P, பாலசிங்கம் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தகவல்: திரு. டேமியன் சூரி

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# திருப்பாலத்துவ சபைத் தினத்துக்கான
# தேசிய இயக்குநரின் செய்தி (5-2-1989)

அன்புச் சகோதரரே,

பரிசுத்த தந்தை பாப்பு II-ம் அருள் சின்னப்பர், 1984 ஏப்ரல் 26-ம் திகதி வியாழக்கிழமையன்று ரோமாபுரியில் யூனிசெப் ஸ்தாபனத்தின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் ஒவ்வொரு பிள்ளையும் 'மனுக்குலத்தின் நம்பிக்கைக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது'' எனக் குறிப்பிட்டார் இன்றைய உலகில் ஒரு குழந்தையின் ஆழமான பங்குபற்றிய இந்தவரைவிலக்கணமானது நம்மனைவருக்கும் நிரந்தரமான ஆழ்ந்தவிதத்தில் அதனை குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது.

நம்பிக்கையின் சின்னம்:

குழந்தைகள் எப்போதுமே மனுக்குலத்தின் மாபெரும் செல்வம், அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதனால் மட்டும் இவ்வாறு கூறப்படவில்லை. உண்மையில், உலகின் கைத்தொழில் முன்னேற்றமடைந்த நாடுகள் சிலவற்றில் குழந்தைகள் தொகை மிகக் குறைவாகவே உள்ளது. அவர்களுக்கிருக்கும் விசேட ஆற்றல்கள் எவற்றுக்காகவும் இவ்வாறு கூறப்படவுமில்லை, அவர்களே மனுக்குலத்தின் நம்பிக்கையாக, அதன் நம்பிக்கைமிகுந்த எதிர்காலத்தின் சின்னமாக இருப்பதுதான் அதற்குக் காரணம். எமது குழந்தைகளில் எமது வருங்கால நம்பிக்கைகள் நிறைவும் நெறியும் காண்கின்றன. அவர்களில்லாவிட்டால் மனுக்குலமானது தளர்ந்து, சிதைவுற்று அழிந்து கொண்டிருக்கும் ஒன்றாக ஆகிவிடும். பூரண அழிவு எம்மை எதிர்நோக்கும், இந்த அர்த்தத்தில்தான் பாப்பு II-ம் அருள் சின்னப்பர் குழந்தைகளை ''மனுக்குலத்தின் நம்பிக்கைக்கு ஓர் அடையாளம்'' எனக் குறிப்பிடுகின்றார்.

ஏற்றத் தாழ்வு, சுயநலம் என்னும் இழிநிலை:

ஆனால் இன்றைய உலகில் எமது பாலர்களை எதிர்நோக்கும் நிலைமைகள் பெரும்பாலும் மிகக் கெடுதியானவையாகவும் தீங்கிழைப்பனவாகவும் உள்ளன. இன்று மனுக்குலத்தைப் பெரிதும் பீடித்துவரும் சுயநலம், சுயஅழிவையே கொண்டுவரும் அதிகார மோகம் ஆகியவற்றின் அழிவிளைவுகளால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் அவர்களே, கொடுமைப்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு, பசியுற்று, புறக்கணிக்கப்பட்டு, கைவிடப்பட்டு, சுயநலத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு நிற்கும் முகங்களில் அவர்களது வேதனை துன்பம் ஆகியவற்றுக்கு மேலாகப் பிரதிபலிப்பது மனிதனது அடிப்படையான பாவநிலையும் சுயநலமும்தான். ஒரு குழந்தையின் முகம் பசியினால் விகாரப்பட்டிருந்தால், அது இறைவன் தந்த செல்வத்தை சுயநலத்தால் பதுக்கி வைத்து ஏனையோருக்கு உணவு கிடைக்காமற் செய்தவர்களின் வறுமையையே பிரதிபலிக்கிறது. ஒரு குழந்தையின் முகம் அச்சத்தாலும் வன்முறையாலும் காயமுற்றிருந்தால் அது எமது அதிகார, ஆதிக்க வெறியின் தீய விளைவுகளையே பிரதிபலிக்கின்றது. சுருங்கக்கூறின், காயமுற்று, மெலிவுற்று, துன்புறும் எமது பிள்ளைகளின் முகங்கள் மனிதனது கொடுமையையும் பேராசையையுமே பிரதிபலிக்கின்றன. இது தன்னலமே கருதுகின்ற எமதுலகின் இழிநிலையாகும்.

விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் காரணமாக மனிதன் இவ்வளவு முன்னேற்றமடைந்து, மிக வேகமாகத் தன் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டதுடன், சந்திரனையும் நட்சத்திரங்களையுமே ஆளக்கூடிய ஒரு ஆற்றலைப் பெற்றிருந்தாலும், பெருந்தொகையான மக்களது அவலநிலை இருமடங்காக அதிகரித்துள்ளது. வெறுக்கத்தக்க நாசகார ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் கோடிக்கணக்கான டாலர்கள் செலவிடப்படுகின்றன. இடைவிடாது செல்வத்தைத் தேடுவதன் மூலம் சூழல் படிப்படியாக அழிக்கப்படுகின்றது. போலியான இன்பசுகங்களைத் தேடுவதில் ஒழுக்க சன்மார்க்க நெறிகள் கைவிடப்படுகின்றன. வாழ்வின் மகத்துவமும் மதிப்பும் போய் விட்டன. மூலவளங்கள் பதுக்கப்பட்டு; இலட்சக்கணக்கான மக்கள் பட்டினிக்கும் சாவுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்.

மக்களைத் துன்புறுத்தி அடிமைப்படுத்தக் கூடிய சகல விதமான அரசியல், அல்லது சமூக பொருளாதார சித்தாந்தங்களும், அவர்கள் மீது திணிக்கப்படுகின்றன.

இத்தகைய கொடுமைகளுக்கு முதலில் பலியாகிறவர்களுள் எமது பிள்ளைகளும், அடங்குவர். மனிதனுடைய இன்றைய நிலையின் யதார்த்தங்கள் அவர்களது முகங்களில் பிரதிபலிக்கின்றன. எமது பிள்ளைகள் எம்மிடமிருந்து பெறப்போகும் முதுசொத்து இதுவானால் எதிர்காலம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

உண்மையான கிறிஸ்தவ மனப்பான்மையுடன், உள்ளவர்கள் இல்லாதவர்களுடன் தமது செல்வத்தைப் பகிர்ந்து கொள்ள மனதாயிராவிட்டால் தமது பிள்ளைகளையும், தம்மைப் போன்றே சுயநல வழிகளைக் கடைப்பிடிக்க ஊக்குவித்தார்களானால், எதிர்காலம் எவ்வளவு கவலைக்கிடமானதாக இருக்கும்.

பாலப்பருவத்தின் அழகு

ஆயினும், நிலைமை முற்றிலும் திருத்த முடியாத அளவுக்கு படுமோசமாகி விடவில்லை. ஏனெனில் தற்கால மனிதனின் கட்டுப்பாடற்ற அதிகார, ஆதிக்க வெறி, பொருளாசை ஆகியவற்றால் பாவம் நிறைந்திருந்த போதிலும் சதுப்பு நிலத்தின் சேற்றிலே முளைத்து உயர்ந்து வளர்ந்து, படைத்தவனின் புகழ்பாடும் அழகிய தாமரை மலரைப்போல், எமது பிள்ளைகள், அவர்கள் செல்வந்தராயினும் வறியோராயினும், பௌத்தரோ, இந்துக்களோ, கிறிஸ்தவரோ யாவராயினும், அவர்களது மாசற்ற தன்மையும் தன்னலமின்மையும், உயர்ந்து விளங்குகின்றன. அவர்களது எளிமை, மாசற்ற தன்மை, தன்னலமின்மை ஆகியன எம்மனைவருக்கும் ஒரு சவாலாக இருப்பதுமட்டுமல்ல, ஒரு நல்ல எதிர்காலத்திற்கும், நம்பிக்கை தருவதாக இருக்கின்றது. இந்த அர்த்தத்தில் தான் நாம் திருத்தந்தையின் வார்த்தைகளை விளங்கிக் கொள்ளவேண்டும்.

யேசுவும் குழந்தைகளும்:

குழந்தைகளைப் பற்றி கிறிஸ்துநாதர் எமக்குப் படிப்பிப்பது என்ன? அவர்களை ஆசீர்வதித்து (மாற்கு 10 : 16) அவர்களைப் பாதுகாக்கும்படி பெரியவர்களுக்குக் கட்டளையிட்டார். (மத். 18:6) குழந்தையைப் போன்றவர்களுக்கே இறையரசு உரியது எனவும், அறிவித்தார். (லூக். 18 : 16)

திருப் பாலத்துவம்:

பிரான்ஸ் நாட்டின், நான்ஸி நகர ஆயர் சாள்ஸ் டி போபின்- ஜன்ஸன் என்பவரால் 1843 ல் ஆரம்பிக்கப்பட்ட திருப்பாலத்துவ சபையானது சகல கத்தோலிக்க சிறுவர்களுக்கும் உணர்த்த முயல்வது யாதெனில், கிறிஸ்துவின் பேரன்புக்குச் சான்று பகர்வது, கிறிஸ்துவைப் பின்செல்வோராகிய அவர்களது பொறுப்பாகும் என்பதே. தமக்குச் செல்வாக்குள்ள சொந்தச் சூழலில், நீதி, அன்பு, அமைதி, பகிர்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஒழுங்கை ஏற்படுத்தும் பணிக்கு அவர்கள் தம்மை அர்ப்பணிக்க முயலவேண்டும். வளர்ந்தோரைவிட சிறுவர் இதைச் சிறப்பாகச் செய்யமுடியும். ஏனெனில், அவர்களது உள்ளங்கள் பேராசையால், மாசுபடுத்தப்படவில்லை.

இலங்கைச் சிறுவர்கள்

இலங்கையின் வரலாற்றில் மிகத்துன்பகரமானதும், கவலை தருவதுமான இக்காலகட்டத்தில், நம்மனைவரையும் ஒரு மனமாற்றத்திற்கு அழைத்து பகையும் பழிவாங்குதலும், நிறைந்தஎண்ணங்களை அகற்றி அமைதியும், அன்பும் நிறைந்த எண்ணங்களை ஏற்படுத்தக் கூடியவர்கள் யாராவது இருப்பார்களாயின், அவர்கள் நம் குழந்தைகளேயாவர். மற்றொரு குலம், மதம், தேசிய இனம் அல்லது அரசியல் சார்பைச் சேர்ந்தவர்களாகிய எமது அயலவர் மட்டில் நாம் பகையெண்ணம் கொண்டிருக்கும் வேளையில், எமது விருப்பத்துக்கு மாறுகத்தன்னும் எமது பிள்ளைகள் எளிமையோடும், கள்ளங்கபடமின்றியும் ஏனைய சிறுவரோடு கூடி, கதைத்துச் சிரித்து விளையாடுவதைக் காணும் போது, எமது மனப்பான்மையையிட்டு நாம் வெட்கப்படவேண்டும். இன்று நாடு தீப்பற்றி எரிகிறதென்றால், எம்மைச் சூழவர நிகழ்வனவற்றால் எமது பிள்ளைகள் பெரிதும் துன்புறுகிறார்களென்றால், பிரிவினையும், தன்னலமும், அற்பத்தனமும் கொண்ட மனப்பான்மையால் நாமே தான் அந்தத் தீ பற்றுவதற்கு துணைபுரிந்துள்ளோம். ஒருவருக்கெதிராக ஒருவர் ஆயுதமெடுப்பது நாட்டுக்கு நன்மை செய்யப் போவதில்லை. இன, கலாச்சார, சமய, சமூக, அரசியல் அடிப்படையில் நாட்டை மேலும், மேலும் பிளவுபடுத்தி கூறுபோடவே துணைபுரியும். அது ஆயுத உற்பத்தியாளருக்கு இலாபத்தைக் கொடுக்கும். தலைமைத்துவ தாகம் கொண்ட பல்வேறு அந்நிய வல்லரசுகளுக்கு வாய்ப்பளிக்கும். நாம் காக்க விரும்பும் மதிப்பீடுகளையே அழித்துவிடும். எல்லாவற்றுக்கும் மேலாக அது எமது குழந்தைகளின் மனதிலும், உள்ளத்திலும் நஞ்சூட்டி இந்த நாட்டையும் அதன் எதிர்காலத்தையும், அழிக்க ஏதுவாகும். வளர்த்து எதிர்காலத்தலைமுறையினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமையும், அழிவும் இதுதான் இன்றைய இலங்கையின் இழிநிலை.

ஆகவே, உலகெங்குமுள்ள சகல சிறுவரோடும், விசேடமாக எமது சொந்த நாட்டுச் சிறுவரோடும் தமக்கேயுரிய வழியில் அமைதி, அன்பு, பகிர்தல் ஆகியவற்றுக்காக உழைக்கும்படி, எமது பிள்ளைகளை ஊக்குவித்து, அவர்களைப் பாதுகாக்க கடின முயற்சி எடுப்போமாக.

சகல இலங்கைச் சிறுவர்களும், இன்று சமாதானத்தின் அப்போஸ்தலராக விளங்குவார்களாக.

பிதா மல்கம் ரஞ்சித்
தேசிய இயக்குநர்.

---

**"குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் தடுக்கவேண்டாம், ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே"**

(மாற். 10, 14)

---

## மறைபரப்பும் குழந்தைகளின் செபம்.

ஆண்டவரே எம்மை மீட்பதற்காக நீர் இவ்வுலகில் வாழ்ந்த போது ஏழ்மையில், குழந்தைப் பருவத்தின் வளர்ச்சியில் ஏற்படும் வேதனையையும், துன்பத்தையும் முதன்முதலாக அனுபவித்தீர். உம்மைப்போல் துன்புறும் ஒவ்வொரு குழந்தையிலும் உம்மைக் காணவும், அவர்கள் படும் கஷ்டங்களிலும் துயரங்களிலும் நாம் பங்குகொண்டு வாழவும் எமக்கு உமது அருளைத் தாரும். உமது முன்மாதிரிகையினுல் உந்தப்பட்ட நாம் தைரியத்துடன், செல்வாக்குக் குறைந்த எம் சகோதரருடன் நாம்பெற்ற அருளை, செல்வத்தைப் பகிர்ந்துகொள்ள எமக்கு வீரத்துவத்தைத் தந்தருளும். எங்களுடைய தியாகங்கள் உமது அன்பின் அடையாளமாக அவர்களுக்கு இருக்கவும் உமது தாராளத்தன்மையை அவர்கள் எம்மூலம் அனுபவிக்கவும் வேண்டுமென்று உமது திருமகன் யேசுவின் மூலம் வேண்டுகின்றோம். ஆமென்.

---

## திருந்தந்தையின் மறைபரப்புச் சபைகளில் ஒன்று
## திருப்பாலத்துவ சபை

ஸ்தாபகம்:- 1843 ஆம் ஆண்டு
ஸ்தாபகர்:- ஆயர் டீ. வோபின் ஜன்சன்
ஸ்தாபிக்கப்பட்ட இடம்:- நான்சி, பிரான்ஸ்
திருப்பாலத்துவ சபையின் கடமைகள்:-

1. அருள்நிறை மரியே'' எனும் செபத்தையும் தூய கன்னித்தாயே எங்களுக்காகவும் விசுவாசமற்றிருக்கும் பிள்ளைகளுக்காகவும் வேண்டிக்கொள்ளும்'' எனும் வேண்டுதலையும் நாளாந்தம் சொல்லுதல்

2. மறைபோதக நாடுகளின் பிள்ளைகளுக்காகப் பரித்தியாகம் செய்தல்:-

நன்மைகள்:- இவற்றில் பங்குபெறும் பிள்ளைகள் மற்றவர்களுக்கு மட்டுமன்றித் தமக்கும் உதவிசெய்யும் வாய்ப்பைப் பெறுகின்றனர். தமது தபத்தாலும் செபத்தாலும் மற்றவர்களை அன்புசெய்ய முயலும்போது தம் வாழ்நாளில் மற்றவர்களைப் புரிந்துகொள்ளவும் அன்பு செய்யவும் பயிற்றப்படுகின்றார்கள். பிள்ளைகளின் மறைபரப்பு ஆர்வம் வளர்கின்றது. பெருந்தொகையான அங்கத்தவர்களின் மன்றாட்டுக்களின் பயனையும் பெறுகின்றனர்.

# தியாக உள்ளங்கள்

அது அவளுக்கு முதலிரவு, மாப்பிள்ளை பெண்ணின்வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கின்ருர். வசந்தியைத்தோழிகள் அறையின் கதவருகேகொண்டுவந்து விடுகின்றனர். சத்திர சிகிச்சைக்குப்போகும் நோயாளியைப்போன்று பயந்து, பயந்து உள்ளே செல்கின்ருள். கையிலிருக்கும்பால்கிண்ணம் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறது.

தனக்கு மனைவியாக வந்தவளின் செய்கைகளையும், உணர்வுகளையும் காலைமுதல் கவனித்துக் கொண்டிருந்த சுகுமார் இவற்றையும் கவனிக்கத்தவறவில்லை. மிகவும் நிதானமாக வசந்தியைப்பிடித்து அமர்த்தி, அமைதியாகத் தன் மனதில் எழுந்த சந்தேகங்களையும். எதற்காக தன்னைக்கண்டு பயப்படவேண்டும் என்பதையும், சமாதானமாகக்கேட்கின்ருன். இதுவரை பயந்து கொண்டிருந்த வசந்திக்கு இவனது சமாதானமான பேச்சு கொஞ்சம் நிம்மதியைக் கொடுத்தது. முதலில் தயங்கினலும் அவள் சொல்லியே ஆகவேண்டிய நிலைக்கு வந்தாள்.

'வசந்தி' அவள் பெற்றோருக்கு ஒரே மகளாகப் பிறந்தவள். மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்ததால், அவள் வசதியாகவே வாழ்ந்து வந்தாள். தந்தை சிற்றம்பலம் கஞ்சல்தனம் மிகுந்தவராகக் காணப்பட்டாலும். வசந்தியைப் பொறுத்தவரை எந்தக் குறையும் வைக்காது வளர்த்து வந்தார். இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தும், தமது பிள்ளை ஒழுக்கம் நிரம்பியவளாக வளர வேண்டும் என்பதற்காக ஒரு கிறிஸ்தவ மகளிர் கல்லூரியில் படிக்கச் சேர்த்தார்கள். இந்துப்பெண்ணான வசந்தி கிறிஸ்தவ கல்லூரியில் படிக்கத் தொடங்கியதாலும், அவர்களுடன நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததாலும், கொஞ்சம், கொஞ்சமாக கிறிஸ்தவ மதத்தில ஈடுபாடு கொள்ளத்தொடங்கினுள். இவளது இந்த ஈடுபாடு நாளாக ஆக முழுமையாக அவளை ஈடுபட வைத்தது கிறிஸ்தவ மதம் அவளை முழுமையாக அரவணைத்துக்கொண்டது.

க. பொ. த உயர்தரப் பரீட்சையும் முடிவடைந்துவிட்டது. பரீட்சையில திறமையாக எழுதிவிட்டு, பெறுபேறு வரும்வரை வசந்தி வீட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தவேளையில் அவள் தனது அறையில் கிறிஸ்தவ மதபடங்களைவைத்து அவற்றை வழிபட்டுக்கொண்டு வந்தாள். ஒரு நாள் அவள் வழிபாடு செயதுகொண்டிருக்கும்போது. அங்கே வந்த அவளது தாயார் ''என்னடி இது, எங்கட குலத்தில் இல்லாத வேலையெல்லாம் செய்கின்ருய், கொப்பர்கண்டால் கொலைதான் நடக்கும்'' அவள் எரிமலையாய்க் கொதித்தெழுந்தாள்.

சிற்றம்பலத்தார்க்கு விஷயம் தெரிய வந்தது. அறையிலுள்ள அத்தனை கிறிஸ்தவ படங்களும் அகற்றப்பட்டன. பதிலாக இந்துப்படங்கள் வைக்கப்பட்டன கிறிஸ்தவ கல்லூரியில் படிக்கவிட்டதால் தானே! இவள் இந்த நிலைமைக்குவந்தாள் என்று அன்றுடன் அவளது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அன்றிலிருந்து வசந்தியை எங்கேயும் தனியே செல்ல விடுவதில்லை. எதற்கும் கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது நரகவேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

## சிறுகதை

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன, ஆனல் வசந்தியின் மனம் மாறுவதாகத் தெரியவில்லை. மாருக அவளது பக்தி வலுவடைந்து சென்று கொண்டிருந்தது எனவே திருமணம் முடித்துவைத்தால் இவளை மாற்றிவிடலாம் எனஎண்ணி திருமணப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல இடங்களிலிருந்தும் மாப்பிள்ளைகள் வந்தார்கள்.

''பெண்ணைப்பார்த்தார்கள், பிற்பாடு இந்த சம்பந்தம் சரிப்பட்டு வராது என்றுகூறிச் சென்று விடுவார்கள். காரணம் கேட்டால் ''பெட்டைக்கு ஏதோ பிரச்சனைபோல, உம்மெண்டு கொண்டு இருக்குது. இதில் ஏதோ சிக்கல் இருக்குது'' என்று கூறுவார்கள். இது சிற்றம்பலத்தாருக்கு வேதனையைக் கொடுத்தாலும் வசந்திக்கு ஆறுதலைக் கொடுத்துக் கொண்டிருந்தது

✤✤✤✤✤✤✤✤✤✤✤

J. மேரி மெக்டலின்
பலாலி தெற்கு, வயாவிளான்.

✤✤✤✤✤✤✤✤✤✤✤

'சுகுமார்' சிற்றம்பலத்தாரின் தங்கை மகன், கொஞ்சம் வசதி குறைந்த குடும்பம். இவனுக்கு நான்கு சகோதரிமார் இருந்தனர். தகப்பனர் இறந்ததினலும், சகோதரிகளைக் காப்பாற்றுவதற்காகவும், படிப்பை இடையில் நிறுத்திவிட்டு விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு அவன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது சுகுமாரை இந்த சிற்றம்பலத்தார் தேடவில்லை. அவனது இரண்டு சகோதரிகளுக்கும் திருமணம் நடக்க இருந்த சமயத்தில் உதவவில்லை. ஏதோ மற்றவர்களைப்போல் வந்து நின்றுவிட்டுப் போனவர். இன்று தனது சபதத்தை நிறைவேற்றத் தனது பிள்ளையின் இலட்சியத்தை உடைத்தெறிய சுகுமாரைத் தேடி வந்திருக்கின்ருர்.

சுகுமாருக்கு இந்தத் திருமணத்திற்குச் சிறிது கூட விருப்பமில்லை, ஆனல் சகோதர பாசம் என்ற ஒன்று இருக்கல்லவா? சுகுமாரின் அம்மா, சிற்றம்பலத்தார் செய்தவற்றிற்காக பிள்ளையை வெறுக்கக் கூடாது. நடந்தவற்றைமறந்து வசந்தியைத் திருமணம் செய்யுமாறு சுகுமாரை வற்புறுத்தினுர் தாய். எவருடைய பேச்சையும் கேட்காவிடடாலும் தாயினுடைய சொல்லைத்தட்டாத சுகுமார் தாயாரின்விருப்பத்துக்குச் சம்மதம் தெரிவிக்கின்ருன். இதனடிப்படையிலேயே நடந்துமுடிந்த திருமணம் நிறைவேறி இருந்தது.

எதுவுமே பேசாமல். குனிந்த தலை நிமிராமல் இருந்த வசந்தியின் முகத்தை மெல்ல உயர்த்துகின்ருர் சுகுமார். அவள் கண்கள் கங்கையாக இருந்தது. ''ஏன் வசந்தி. ஏன் அழுகின்ருய் என்ன நடந்துவிட்டது', சுகுமார் கலவரத்துடன் கேட்டேன். எப்படித் தனது நிலையைப் புரியவைப்பது என்று தவித்த வசந்தி ஒருவாறு தன்னைச் சமாதானப்படுத்தித் தனதுநிலையை விளக்கலானுள்.

''நான் கூறுவது சில நேரங்களில் உங்களுக்கு துன்பத்தை உண்டுபண்ணலாம். ஆனல் என் நிலையை நான் கூறியே ஆகவேண்டும். எனக்கு இந்தத் திருமணத்தில் சிறிது கூட விருப்பமில்லை. அப்பாவின் வற்புறுத்தலினலேயே இந்த திருமணத்துக்கு ஒத்துக்கொண்டேன் எனது இலட்சியம் வேருக இருந்தது. எந்த இலட்சியத்தைநான் அடையவேண்டுமென்று இருந்தேனே அந்த இலட்சியம்தான் என்னை இந்த நிலைமைக்கே கொண்டுவந்துள்ளது

''இந்துப் பெண்ணுன நான், கிறிஸ்தவ கல்லூரியில் படித்ததாலும், கிறிஸ்தவர்களோடு பழகியதாலும் எனக்கு கிறிஸ்தவ மதத்தில் அளவுகடந்த பக்தி ஏற்பட்டது இந்தப் பக்தி நாளாக ஆக வளர்ந்து இறுதியில் நான் ஓர் கிறிஸ்தவ துறவியாகவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது. எனவே அந்த இலட்சியத்தை அடைய நான் முழுமையாக உறுதிபூண்டேன். இதை அறிந்த எனது பெற்றோர், அந்த இலட்சியத்திலிருந்து என்னைப் பிரித்து வைப்பதற்காகத்தான் எனது விருப்பமில்லாத இந்தத் திருமணத்தை முடித்து வைத்தார்கள்.'' இதற்குமேலே அவளால் எதுவும் கூறமுடியவில்லை. வாய்விட்டே அழுதுவிட்டாள்.

வசந்தியின் நிலையைப்புரிந்து கொண்ட சுகுமாருக்கு, எப்படி ஆறுதல்கூறுவதென்றே தெரியவில்லை,சிறுநேர அமைதியின் பின் அவன் தொடர்ந்தான். ''வசந்தி! புனிதமான இலட்சியம்கொண்டவளாக நீ இருப்பாய் என்று முன்னரே எனக்கு தெரிந்திருந்தால் நிச்சயம் உனது புனிதமான அந்தப் பயணத்துக்கு உதவியாக இருந்திருப்பேன். ஆனல் இனி இலட்சியம் நடக்கக் கூடியதா? முடியுமானல் இப்போதும் உனக்கு விருப்பம் என்ருல் உனது அந்தப் புனிதமான பயணத்துக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

''சுகுமாரின் இந்த வார்த்தைகள் வசந்தியை ஒரு கணம் திகைக்க வைத்தது. இப்படியான ஒரு பதில் அவனிடமிருந்து வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. எவ்வளவு

(தொடர்ச்சி 7 ஆம்பக்கம்)

# தேனருவி

ஆண்டின் 4-ம் ஞாயிறு (29-01-89)

## இன்றும் இறைவாக்கினர்

பரீட்சையில் ஒழுக்கவியல் பாடத்தில் மூன்று முறையும் தோல்வியடைந்தான் ஒரு மாணவன். அவன் தன் எதிர்கால வாழ்வுக்கு எந்தத் துறையைத் தேர்ந்து கொள்ளலாம் என்று ஓர் ஆலோசகரிடம் கேட்டானும். ஆலோசகர், அவனிடம் நீர் ஓர் அரசியல் வாதியாகத்தான் வரமுடியும் என்ருராம் ஏனென்ருல் பெரும்பான்மையான அரசியல் வாதிகள் நீதி, உண்மை நியாயத்திற்குப் பயப்படாதவர். அவர்களது மேடைப் பேச்சு கூட்டம் முடிந்ததும் பாடையேறி விடுகிறது. வாக்குறுதிகள் நிறைந்த இலட்சியக் குரல் தேர்தல் முடிந்ததும் ஓசை இழந்து விடுகிறது

அரசியல் வாதிகள் மட்டுமல்ல,சமூகத்தின் எந்த மட்டத்திலும் எத்துறையில் ஈடுபட்டாலும், ஒவ்வொரு மனிதனும் தான் அழைக்கப்பட்ட அந்தஸ்தில் தானும் ஓர் ''இறைவாக்கினன்'' எனக் கருதாவிட்டால் இந்நிலைதான்.

எரேமியாஸ் இறைவாக்கினரை அழைத்த இறைவன் ''உன் தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே நாம் உன்னை அறிந்தோம் கருப்பையினின்று நீ வெளிப்படுமுன்பே உன்னை நாம் அர்ச்சித்திருக்கிறோம்'' என்கிருர்.

அழைப்புக்கள் ஆண்டவரிடமிருந்து வருவதானதால் அதை நிறைவேற்றத் தயக்கம் ஏன் கொள்ளவேண்டும்? மனிதருக்கா கடவுளுக்கா நாம் அஞ்ச வேண்டும்? இறைவாக்குப் பணியின் பாதையில் எதிர்த்து வந்த ஏமாற்றங்கள், முட்டுக்கட்டைகள், முரண்பாடுகள் என்பவற்றின் மத்தியிலும் தளராது நின்றனர் இறைவாக்கினர்,

மக்களின் ஆதரவைக் குறுக்கு வழிகளில் பெறவேண்டும் என்றே, அன்றேல் அவர்களை ஏமாற்ற வேடம்போட்ட வரும் உண்மை இறைவாக்கினரல்லர்

இயேசு இறைவார்த்தையை நிறைவுசெய்யும் தம் அழைப்பை உணர்ந்தவராக தாம் அடியெடுத்து வைத்த இலட்சியப் பாதையில் இடர்களுக்கும் விதிவிலக்கானவரல்லர். முதலாவதான எதிர்ப்பும், ஆர்ப்பாட்டமும் தம் சொந்த ஊர் மக்களிடமிருந்தேவந்தது. அந்நியர்களிடம் கையளித்து அவரைக் கொன்ற குற்றமும் அந்த இனத்தையே சாரும்.

அநீதிக்கும், அதர்மத்திற்கும் தாளம் போட்டு, கூட்டத்தோடு கோவிந்தா போட்டிருந்தால் இயேசு சொந்த ஊரில் செல்வாக்கை மட்டுமல்ல, நீண்ட ஆயுளையும் பெற்றிருப்பார்.

இயேசுவோ, தம் சொந்த ஊரவராயினும் அவர்களது விசுவாசக் குறையையும், அகங்காரத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. உண்மையை உள்ளபடி இடித்துரைக்கத் தயங்கவில்லை.

நாம் வாழும் சூழலிலும், பணிபுரியும் வேலைத்தளத்திலும், எமது அந்தஸ்தின் கடமைகளை நீதி உணர்வுடனும், சமூக உணர்வுடனும் அது ஆண்டவன் அழைப்பெனக் கருதிச் செயல்படுகின்றோமா?

ஊழல்கள், மிரட்டல்கள், கபடத்தனம் மலிந்த இக்கால கட்டத்தில் இறைவாக்குப் பணி ஒரு பெரும் சவால்.நீதி, நியாயத்தின் விலை என்னவென்று சொல்லாமலேபுரியும். பணத்தையும், பதவியையும், போலிக் கௌரவங்களையும் விரும்பித் தேடினல், இறைவாக்கினரைக் கொன்ற குற்றத்திற்கு ஆளாவோம். இன்றும் உண்மையையும் நீதியையும் தள்ளிவிடுபவர், இயேசுவை மலை உச்சியில் ஏற்றித் தள்ளிவிழுத்த விரும்பிய கொடியவராவர்.

எனவே ஆண்டவன் குரல் எம்மில் எதிரொலிக்கவும், இயேசுவின் இறைவாக்குப் பணியை எம்வாழ்வில் தொடரவும் மன உறுதிக்காக வரம் வேண்டி அழைப்பின் தெய்வத்திடம் விடை கேட்போம்.

—சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

---

எரே. 1: 4–5, 17–19. மக்களினங்களுக்கு இறைவாக்கினராய் ஏற்படுத்தினேம்.

1 கொரி. 12: 31–13: 13 தேடவேண்டியது மேலான வரங்களையே.

லூக். 4: 21–30 மலை உச்சியிலிருந்து இயேசுவைத் தள்ளிவிடக் கொண்டு சென்றனர்.

# இளைஞர்களே நீதியான முறையில் முன்னேறுவோம்

மனித வாழ்வில் இளமைப் பருவமே துடிப்பான பருவம். இளைஞர்களாகிய எமது கையிற்தான் வருங்காலம் என்பதை நாம் மறந்து வாழ முடியாது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவருக்குமே தாழ்வு" என்று எமது ஆன்றோர்கள் தெரியாமலா மொழிந்திருக்கிறார்கள். நாம் முன்னேற முடியும். எப்படி? ஒன்றுபட்டு ஒற்றுமையாக சகோதரத்துவமாக வாழ்ந்தால் முன்னேறலாம். இளைஞர்களாகிய நாம் முன்னேறுவதற்கு நீதயான நேர்மையான வழிகள் எத்தனை! எத்தனை!. பிழையான வழிகளைக் களைந்தெறிவோம். நீதியான முறையில் முன்னேறுவோம்.

நீதியான, நேர்மையான வழியில் செயற்பட்டவர்கள் யாரேனும் தோல்வி கண்டிருப்பதாக வரலாறுகள் ஏதும் கூறுகின்றனவா? நீதியே சமாதானத்திற்கு வழி. நீதியான வழியில் செயற்பட நினைப்பது கடினம். முயன்றால் வெல்வோம். அநீதியைப் பின்பற்றுவது இலகு. இலகுவாக நுழைந்த எமக்குத் தொல்லைகளும் தோல்விகளும் ஏற்படுவது சகஜம். நாம் யாவரும் ஒன்று பட்டு நீதியை ஏற்று வாழ்ந்தால். நம் வாழ்க்கையில் மட்டுமல்ல, எமது சகோதரர்களாகிய மற்றவர்களும் வாழ்க்கையில் பயன்பெற நாம் இளைஞர் என்ற வகையில் உதவவேண்டும் நீதியே எமது போர்வை அநீதியைக் களைந்தெறிவோம். நீதியான முறையில் போராடி சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவோம்.

செல்வி: மேரி மாலதி
ஞானரெத்தினம்
புங்குடுதீவு—10

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
27-1-1909

அன்பு இளம் உள்ளங்களுக்கு

"நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே கொடுப்பான்.

கூலிக்கு மேய்ப்பவன் ஆடுகளைச் சொந்தமாகக் கொண்டுளை ஆயனுயிராததால். ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போகிறான். ஏனெனில், கூலியாள் கூலியாள் தான். ஆடுகளின் மீது அவனுக்கு அக்கறையில்லை.

அரு. 10: 11— 13.




நல்ல ஓர் ஆயன் தனது ஆடுகளில் நல்வாழ்வினை முதன்மைப்படுத்தி வாழ்வான் என்ற உண்மையைக் கிறீஸ்து உறுதிப்படுத்துகின்றார். மாணவர் இல்லாது ஆசிரியன் ஆசிரியனாக இயங்க முடியாது. மந்தை இல்லாது மேய்ப்பன் மேய்ப்பனாக இயங்க முடியாது.

நாளைய தலைவர்களாக மலர இருக்கும் நீங்கள் நல்ல தலைவனுக்குரிய நற்பண்புகளைக் கொண்டு பாரினில் பணிபுரிய முன்வாருங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்
அன்பு நெஞ்சன் வி. பி

# இளைஞர்களே முன்னேற்றப் பாதையிலே முன்னேறுங்கள்

"சேனாய் பசனே,
கேளொரு வார்த்தை
நாளைய உலகின்
நாயகன் நீயே"

இளைஞர்களே! நீங்கள் வாழப்பிறந்தவர்கள், அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவர்கள். உங்களிடமும் திறமைகள் உண்டு. ஏன் அதை உணராமல் தான் தோன்றித்தனமாக வாழ்கின்றீர்கள். நீங்கள் தான் நாளைய சமுதாயத்தின் முதுகெலும்புகள். ஆனால் நம் இளைஞர்கள் பலர் தங்களை குறைத்து மதிப்பிடுகிறார்கள். நான் ஒன்றுக்குமே உதவாதன். என்னால் எதையும் செய்யமுடியாது. என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டு எதையுமே தன்னிச்சையாக முன்னின்று செய்யப் பயப்படுகிறார்கள், காரணம் தான் என்ன?

உங்களை நம்பித்தானே நாளைய சமுதாயம் காத்திருக்கின்றது. நீங்களே பயப்பட்டு பின்னின்றால் உங்கள் சமுதாயம் எவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும்?

சற்றுச்சிந்தித்துப் பாருங்கள். ஆழமாக ஆராய்ந்து பாருங்கள். முன்னேற்றமே உங்கள் வாழ்வின் வாயிலாகத்திகழ வேண்டும். முன்னேற்றப் பாதையிலே உங்கள் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கும் நாளைய சமுதாயத்தையும் பின்னோக்கிச் செல்லவிடாதீர்கள். இன்றைய காலகட்டத்திலே இளைஞர்களின் சேவை முக்கியமான தொன்றாகும். சாதிமத பேதமின்றி ஒற்றுமையாக வாழுங்கள். ஏற்றத் தாழ்வுகளைக் களைந்தெறியுங்கள். முன்னேற்றப் பாதையிலே செல்ல முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம்.

இளைய தலைமுறையினரின் இனியதாகம் திக்கெட்டும் முழங்கட்டும்.

—செல்வி மேரி மாலதி
ஞானரெத்தினம்

# இளைஞனே நீ தயாரா???

நாளுக்கு நாள் அமைதியிழந்து கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தை நோக்கும் போது சண்டை, சச்சரவு, அநீதி, பொய், கொலை, களவு நிறைந்த சூழலில் மத்தியில் உண்மை, நீதி நியாயத்தை தேடும் உள்ளங்களே பல. இப்படிப்பட்ட சஞ்சலம் நிறைந்த சமுதாயத்தில் மத்தியில் வாழும் இளைஞர்களாகிய நாம் கிறிஸ்துவுக்காக எழுந்து நிற்க தயாரா? என்று எம்மையே கேட்பது அவசியமாகும் இவ்வுலகில் வாழ்ந்த கிறீஸ்து எமக்கு காட்டிய வழியைப் பின்பற்ற நாம் தயாரா? அல்லது உலகம் எமக்கு காட்டும் வழியில் செல்ல விரும்புகின்றோமா? அநீதியின் ஆட்சி குடிகொண்டிருக்கும் சூழலின் மத்தியில் உண்டாக்கும் நீதிக்கும் எழுந்து நிற்க நாம் தயாரா? கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு கோயிலுக்கு சென்று வருபவர்களோ பலர் ஆனால் நாம் பின்பற்றும் கிறிஸ்துவை நம் வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றோமா? அவர் காட்டிய நெறியை நாம் கடைப்பிடிக்கின்றோமா? கிறிஸ்தவர்கள் என்ற முறையில் பிறருக்கு ஓர் எடுத்துக் காட்டாக வாழ்கின்றோமா? நாம் இன்றைய இளைஞர் என்ற வகையில் கிறிஸ்துவின் அன்பையையமாகக் கொண்டு, உண்மைக்கும் நீதிக்கும் எழுந்துநின்று ஒரு முன்மாதிரியான வாழ்க்கை வாழ முயற்சி செய்வோம்.

செல்வி; ஷாமினி இம்மானுவல்
மாத்தளை.

# இளைஞனுக்கு...

இன்றைய இளைஞனை
அனுதினம்
அழைக்கின்றேன்.
இன்றைய வாழ்வைச் சீர்தூக்க
தவிக்கின்றேன்,
இளைஞனே உன்னில் நம்பிக்கை
உண்டு.
அதனால்தான்.
உன்னை இரக்கின்றேன்.
தருவாய் நல்வாழ்வையென்று
அன்னை என்று உன்னை
அழைத்திடுவேன்.
ஆறுதல் தருவாயென்பேன்.
ஆன்ம தாகம் இல்லாமல்
அன்பில் சேர்ப்பாயென்பேனே.

தி. சந்தியோகு
மாணவர் இல்லம்,
முருங்கன்.




# சட்டத் தொகுப்பில் திருமணம்

கடந்த வாரம் நாம் பார்த்த (9) இரத்த உறவுத் தடையும் (consanguinity) திருமண மூலமான உறவும் (Affinity) சிறிது கடினமானது. அதற்குசற்று அதிக விளக்கம் கொடுக்க விரும்புகிறோம்.

(9) ஒரே வம்ச அடியில் பிறந்தவர்களுக்குள்ளே உள்ள தூரத்தை நாம் வம்சக்கால் என்போம். ஆங்கிலத்தில் degree என்று அழைக்கப்படும். வம்சக்கால் எத்தனையாவது என்பதைக்கண்டு பிடிக்கபொது வம்ச அடியாக இருப்பவரை நீக்கிக்கணக்கிட வேண்டும்.

நேர்வழி என்றால் பொதுவம்ச அடியாக இருப்பவரை நீக்கி மற்ற எத்தனைபேர் வரிசையில் உண்டென்பதைக் கணக்கிட வேண்டும் எத்தனைபேர் உண்டோ அத்தனையாம் கால்.

கிளைவழி என்றால் பொது வம்ச அடியாக இருப்பவரை நீக்கி இரண்டு வரிசைகளிலும் எத்தனைபேர் உண்டென்பதைக்கணக்கிட வேண்டும். எத்தனை பேர் உண்டோ அத்தனையாம்கால்.

(1) →தாய்/தந்தை { (2) பிள்ளை → (4) பேரப்பிள்ளை ; (3) பிள்ளை → (5) பேரப்பிள்ளை }
{ (6) கொள்ளுப்பேரப்பிள்ளை ; (7) கொள்ளுப்பேரப்பிள்ளை }

இப்படி அமையின்
இலக்கம் (1) உம் (2) உம் நேர்வழி ஒன்றாம் கால் — இரத்தஉறவு
இலக்கம் (1) உம் (4) உம் நேர்வழி இரண்டாம் கால் —
இலக்கம் (1) உம் (6) உம் நேர்வழி மூன்றாம் கால் — என்றும், கிளை வழியில்
இலக்கம் (2) உம் (3) உம் இரண்டாம் கால்
இலக்கம் (2) உம் (4) உம் இரண்டாம் கால்
என்று தொடர்ந்தும் அமையும்.

இரத்த உறவ நேர்வழியில் எல்லாக்காலிலும் திருமணத்தைச் செல்லாததாக்குகிறது.

கிளை வழியில் நான் காம் கால் மட்டும் திருமணத்தைச் செல்லாததாக்குகிறது.

(10) திருமணம் மூலமான உறவு நேர்வழியில் எல்லாக் காலிலும் திருமணத்தை செல்லாததாக்குகிறது. ஆனால் கிளைவழியில் தடையில்லை

**(11) வெளிப்படை மதிப்பு (Public propriety)**
(தி. ச. 1093)

ஓர் ஆணும் பெண்ணும் செல்லுபடியான விதத்தில் திருமணம செய்யாமல் அல்லது பகிரங்கமாய்த் தாறுமாறாய் கூடிவாழ்ந்தால் அந்த ஆணுக்கும் பெண்ணின் முதல்கால் நேர்வழி இரத்த உறவினருக்குமிடையே உள்ள திருமணம் செல்லாது அதேபோல் அந்தப் பெண்ணுக்கும் ஆணின் முதல்கால் நேர்வழி இரத்த உறவினருக்குமிடையே செய்யப்படும் திருமணமும் செல்லாது.

(12) சட்ட உறவு (தி. ச. 1094)

தேசச் சட்டப்படி அந்நியர் ஒருவர் தத்தெடுப்பின் வழியாக மகனாகவோ, மகளாகவோ ஏற்றுக்கொள்ளப் பட்டால், இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தன்னைத் தத்தெடுத்தவரின் மகனாகவோ மகளாகவோ கருதப் படுவார் (தி ச. 110)

இவ்வாறு நேர்வழியிலும், கிளைவழியில் இரண்டாம் காலிலும்சட்ட உறவினால் இணைந்தவர்கள் தங்களுக்குள் திருமணம் செய்தால் அத்திருமணம் செல்லாது. எனவே தத்தெடுக்கப்பட்ட மகனை, மகளைத் தத்தெடுத்தவர் மணந்தால், அல்லது தத்தெடுக்கப்பட்டவர் சட்டப்படியுள்ள சகோதரனை/சகோதரியை மணந்தால், அத்திருமணம் செல்லாது.

திருமணத் தடைகளிலிருந்து விலக்கீடு (Dispensation)

திருமணத் தடைகளில் சில, ஐயமின்றி இறைச் சட்டத்தால் ஆனவைகள். எனவே இவைகளிலிருந்து திருச்சபை விலக்கீடு அளிக்க முடியாது.

உதாரணம் : பாலுறவு ஆற்றலின்மை, திருமணத்தளை, நேர்வழி ஒன்றாங்கால் இரத்த உறவு.

சில ஐயத்தோடு இறைச் சட்டத்தால் ஆனவைகள். இவைகளிலிருந்து திருச்சபை விலக்கீடு அளிப்பதில்லை.

உதாரணம்: நேர்வழி ஒன்றாங்காலுக்குப் பின் வரும் இரத்த உறவுகள்; கிளைவழி இரண்டாங்கால் உறவு (தி. ச. 1078, 3). (தொடரும்)

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
க. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் -10

யோவேல் — 2

இந்நூலை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி வரலாற்றில் நிகழ்ந்த ஒருகுறிப்பிட்ட நிகழ்ச்சியை விவரிக்கிறது. வெட்டுக்கிளிக் கொள்ளை நோயையும் வறட்சியையும் விவரித்து. மக்களை மனம் வருந்தும்படியும் உண்மையான நோன்புக்கும் செபத்திற்கும் அழைக்கிறது.

இரண்டாம் பகுதி முடிவுகாலக் கருத்துக்களை விவரிக்கிறது வருங்காலத்தை முன்னைக்கி ஆண்டவரது நாளுக்கு முன்னும், அதோடு வரும் நிகழ்ச்சிகளாகிய எல்லா மக்கள் மேலும் இறை ஆவி பொழியப்படுதல் பிறஇனத்தவர் மேல் தீர்ப்பு, இஸ்ராயேலின் இறுதிப்போர் ஆகியவற்றைப்பற்றியும் விவரிக்கிறது. முதற்பகுதி இரண்டாம் பகுதிக்கு முன்னோடியாகவும் எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது.

முதல் பகுதி வெட்டுகிளிக் கொள்ளை நோயும் மனந்திரும்புதலும் பற்றியது. வெட்டுக்கிளிகளால் மக்கள் பெரும் துன்பப்பட்டனர். இவை சென்ற இடங்களிலெல்லாம் பெரும் அழிவை உண்டாக்கின. எண்ணிக்கையற்ற இப்பூச்சிகள் அரை மணிநேரம் தங்கினால் போதும் மரங்கள், செடிகள், பயிர்கள் எல்லாவற்றையும் தின்று அழித்துவிடும். இத்தகைய கேடு இது வரை நடந்ததேயில்லை.

மனிதனுக்கும் படைப்புக்கு மிடையே உள்ள சீர்கெட்ட உறவு இருபக்கங்களிலும் செயற்படலாம். படைப்பு மனிதனால் துன்புறலாம். மனிதன் படைப்புக்களால் துன்புறலாம். இந்நோக்கில் படைப்புகளால் மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களில் சில நீதியான தீர்ப்பாக இருக்கலாம். மனிதன் தன் பாவநிலையை விட்டு மனந்திரும்பி ஆண்டவரை அண்டிவர எச்சரிக்கையாகவும் மனம் வருந்தலுக்கு அழைப்பாகவும் படைப்புகளால் வரும்துன்பங்கள் அமைகின்றன என யோவேல் விளக்கம் அளிக்கிறார்.

கி. சா. பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 65

## பொன்கன்று வழிபாடு

யாத்திரை யாகமத்தில் 32 ஆம் அதிகாரம் பொன் கன்று வழிபாடுபற்றிக் கூறுகிறது. சீனாய்மலையில் 40 நாட்கள் மோயீசன் இறைவனுடன் தங்கியிருந்தவேளை மக்கள் ஆரோனை வற்புறுத்தி தங்களுக்குத் தேவதைகளைச் செய்து தரும்படி கேட்டனர். ஆரோன் மக்களின் பொன்னணிகளைக் கொண்டு கன்றுக்குட்டி செய்து ஆண்டவரின் திருவிழா கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

சீனாய்மலை உடன்படிக்கை மாபெரும் வழிபாட்டு மறைபொருளைக்கொண்ட செயலாகும். இதை மக்கள் ஏற்றுத்தங்களுடையதாக்கி வாழப்பலகாலம் சென்றது சில வழக்கங்களில் வாழ்க்கை முறையில் ஊறிப்போன மக்கள் சீனாய் உடன்படிக்கையை உடனுக்குடன் எற்கமறுத்தனர்.

பொன்கன்று வழிபாடு யாவேயைப் பிரிந்து போகும் பதிகமா என்று திருநூலிருந்து தெரியவில்லை. ஆரோன் மக்களிடம் "நாளை ஆண்டவருடைய திருவிழா கொண்டாடப்படும்" (யாத் 32: 5) என்று அறிவிக்கிறார். ஆனால் மோயீசன் இச்செயலை வழிபாட்டை வன்மையாக கண்டித்து சட்டப்பலகையை உடைத்து. கன்றுக்குட்டியையும் சுட்டெரித்தார் வழிபாட்டில் ஈடுபட்டு. மோயீசனை எதிர்த்து அவரோடு சேராதவர்களை, வெட்டிக்கொன்றார். இப்படியாக மோயீசனின் சினம் உச்சநிலை அடைவதைக் காண்கிறோம்.

எந்த ஒரு அடையாளப் பொருளும் யாவேயை குறிக்க முடியாது. இறைவன் செய்யச் சொன்ன உடன்படிக்கையின் மேல் உள்ள இரக்கத்தின் அரியணை வெறுமையாக உள்ளது. எரியும் புதரில் நின்று பேசிய இறைவனே மோயீசனை அழைக்கிறார். எனவே தான் இயற்கையைச் சார்ந்த எந்த அடையாளப் பொருட்களைக் கொண்டும் யாவேயை வழிபடக் கூடாது என்று மோயீசன் கொடூரமாகச்செயல்பட்டு இஸ்ராயேல் மக்களின் வழிபாட்டைத் தூய்மையாக்குகின்றார்.

யாவே எந்த உருவத்துக்குள்ளும் அடங்குபவரல்ல, எந்த உருவமாகவும் ஆக்கப்படக் கூடியவருமல்ல, அவருக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பொன்கன்று உருவம் யாவேயை ஏனைய பிற தேவதைகளில் ஒருவராக ஆக்கிவிடும். யாவே தனித்தன்மையானவர், தாமானவர், எந்தப்பொருட்களோடும் ஒப்பிடக் கூடியவரல்ல, இந்தக்கன்று வழிபாட்டால் புதிதாகப் பிறந்த ஒரே இறைவன் கோட்பாட்டையும் வழிபாட்டையும் காத்து சமயப் பெரும் தலைவராகிறார் மோயீசன்.

— இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

அன்பர்களே!

நமது நாக்கு இருக்கிறதே அது ஒரு பொல்லாத அயுதம். அனேக தடவைகளிலே - முன்பின் யோசியாது எதையும், எடுக்க எடுப்பிலே கூறிவிடுகின்றோம். நரம்பில்லாத நாக்கு -தானே எந்த கப்பக்கமும் வளைந்து கொடுக்கும். நமது நாவைச் சகுந்த முறையிலே பயன்படுத்த நாம் பழகிக் கொள்ளவேண்டும். முக்கியமாக இன்றைய காலகட்டத்திலே ...

இதற்கு நம்முன்னோர் ஆழமாகச் சிந்தித்து - அர்த்தத்தோடு கூறுகின்றார்கள் இப்படி

"நாவால் பிறக்கும், நன்மையும் - தீமையும்"

"எலும்பில்லாத நாக்கு. எதையும் பேசும்"

இப்படி இரண்டு வார்த்தையில் எம்மை எச்சரிக்கும் முன்னோருக்கு இறைவார்த்தையும் அறிவுரை கூறுகிறது

12 / 13 ல் "வாய்ப்பாவங்கள் நிமித்தமோ- தீயோனுக்கு நாசம் அணுகுகின்றது. நீதிமானோ இக்கட்டில் நின்று தப்பித்துக்கொள்வான்"

பொருத்தம் எப்படி?

இன்று நமது இனம் முழுவதும் ஒருவித உணர்ச்சிகர நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. நீதியும் சமாதானமும் அச்சமில்லாத உணர்வும் எமக்குக் கிட்டாதா? என ஏங்கித் தவித்து நாளை என்ன நடக்குமோ நமது வாழ்வு நிரந்தரமோ என்றெல்லாம், சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையை நாம் அனைவரும் நினைத்து ஏங்கிநிற்கிறோம். ஆனால் தெய்வநீதி என்று ஒன்றிருக்கிறது. அது எம்மை என்றும் பாதுகாக்கும்

"நம்பினோர் கெடுவதில்லை- அது நான்கு மறை தீர்ப்பு" என்ற கவிஞனின் கூற்றுக்கு உட்பட்டு வருகின்றார் எமது முதுமொழியாளர்.

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்'

"பொறுத்தார் பூமி ஆள்வார்"

"ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு"

இம்மூன்று முதுமொழிக்கும் வேதாகம ஆசிரியர் ஒரே கருத்துப்பட கூறுகிறார் இப்படி.

'மதி கெட்டவன் தன் கோபத்தை உடனே காட்டுவான். பொல்லாப்பைப் பொருட்படுத்தாதவன் ஞானியாம்"

சிந்திக்கவும், சீர்திருத்தவும் மேற்கூறிய அறிவுரைகள் இன்றே நமது வாழ்விற்கு எப்படி பொருத்தமாக அமைகின்றது. பார்த்தீர்களா ... ?

ஆழமாகச் சிந்தித்து, அதற்கேற்றபடி நாமும் வாழப்பழகிக் கொள்வோமா மீண்டும் வருவேன்.

### வாரம் ஒரு சிந்தனை

"சினம் கொண்ட பிறகு சிந்திப்பதைவிட —சிந்தித்த பிறகு சினம் கொள்வது நல்லதில்லையா?"

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 4 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### பாடுங்கள் பாட்டுப் பாடுங்கள்.

அன்புக் கண்மணி எழுந்திடு !

அன்புக் கண்மணி எழுந்திடு !
ஆலயம் செல்லப் புறப்படு !
இறை சித்தம் நிறைவேற்ற !
ஈசன் பாதம் வணங்கிடு !
உண்மை வடிவம் யேசுவை !
ஊன்றி உன்னகம் பதித்திடு !
எங்கள் தலைவர் யேசுவை !
ஏணியாய்க் கொண்டு உயர்ந்திடு !
ஐயம் இன்றி வாழவே !
ஒன்றே ஒன்று செய்திடு !
ஓதல் ஒன்றே அச்செயலாம்
ஔடதம் போன்றதே இச் செயலாம்

அன்பு விழி.

### பேசும் விழி:

"விவிலியமும் திருக்குறளும்"

உங்களுக்கு வேண்டுமா ? இன்றே சென்று புனித வளன் அச்சக அலுவலகத்தில் உங்கள் அங்கத்துவ எண்ணைக்கூறி, உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள்.

உங்கள் கையில் புத்தகங்கள் (பகுதி I, II) அன்பளிப்பாகத் தரப்படும்.

புத்தகங்களைப் பெற்றுக் கொண்டவர் பதில்போட மறக்க வேண்டாம்.

கையிருப்பு சிறுதொகையே ! விரைந்து சென்று பெற்றுக் கொள்ளுங்கள்

அன்பின்
அன்பு விழி.

### வாரம் ஒரு வார்த்தை:

எனக்குத் துன்பம் விளைந்தது நன்மையே அதனால் உன் நியமங்களை நான் கற்றுக் கொள்ள முடிந்தது.

சங். 118: 7.

### அங்கத்துவம்:

அங். எண். 128 ம. சத்தியசீலன் ஆண்டு 11
புனித சாள்ஸ் ம. வி., யாழ்ப்பாணம்.
,, ,, 129 S J செருபிம் ஆண்டு 10
புனித சாள்ஸ் ம. வி யாழ்ப்பாணம்.
,, ,, 130 ம மதுரநாயகி ஆண்டு 7
,, ,, 131 யே யூலியற் ஆண்டு 7
,, ,, 132 கி. ஜெனிஸ்ராதீபா ஆண்டு 7
புனித அந்தோனியார். பெண்கள் வி, யாழ்ப்பாணம்.
அங் எண். 133 றூபஸ் இராசநாயகம் ஆண்டு 6
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

### மயக்க மருந்து:

கையிலிருந்த பொருள்கள் அனைத்தையும் விற்று ஆராய்ச்சியில் மூழ்கி இருந்தார் ஒருவர். ஆராய்ச்சியின் இறுதியில் அவர் ஒரு பொருளை முகர்ந்து பார்த்ததும் மயங்கிவிழுந்தார். பல மணி நேரம் கழித்து உணர்வு பெற்று எழுந்தார். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காரணம் அவர் எதிர்பார்த்த மயக்கமருந்தைக் கண்டுபிடித்து விட்டார். மயக்க மருந்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி சிம்ஸன் ஆவார்.

தந்தவர்: சலேஸ்

## சிந்தனைக்கு....

தன்னையே ஜெயிக்கப் பிரயாசைப்படுகிறவனைவிட வேறு எவனும் அதிகபலமான யுத்தம் செய்வதில்லை.

ஒருவனிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு தேவசிநேகம் மிகுதியாய் உள்ளதோ, அவ்வளவுக்கு அவன் மாட்சி பெறுவான்.

ஞானமும், மனச்சாட்சியுமுள்ளவனிடத்தில் ஆலோசனை கேட்டு நடப்பது, வாழ்வுக்கு மிகுந்த பலனளிக்கும்.

மனித வாழ்வில் வரும் துன்பங்கள் நன்மைத்தனத்தில் நம்மைப்பண்படுத்த இறைவன் பயன்படுத்தும் உரமாகும்.

செல்வி. லூசியா சூசைப்பிள்ளை.
யாழ்ப்பாணம்.

## அருள்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட கவிதை — கட்டுரைப் போட்டிகளில் பரிசுபெற்றோர்

கவிதைப் போட்டி

1ம் இடம்.— செல்வன ப. ஞானராஜ் (ஆண்டு 10) மன்/நாவற்குளம் றோ.க.த.க. பாடசாலை பெரிய நாவற்குளம் திருக்கேதீஸ்வரம்.

2ம் இடம்:- செல்வி மொறின் பப்ரிஸ்ரா றதினி(ஆண்டு9/ யா/இளவாலை கன்னியா மடம் ம வி. இளவாலை.

3ம் இடம்:- செல்வி செ. அக்னேஸ்வரி மன்/முருங்கன் ம. வி. முருங்கன்.

ஆறுதல் பரிசுகள்:-

I செல்வி அஞ்சலா டார்சினி மனோகரன் (ஆண்டு 8) யா/ இளவாலை கன்னியா மடம ம. வி. இளவாலை.

II செல்வன் மரியநாயகம், மரிவுளோ, யா/தாளையடி றோ. க. த. க. பாடசாலை, தாளையடி.

கட்டுரைப் போட்டி:-

1ம் இடம்: செல்வி நாகராசா சுரேகா, (ஆண்டு 8B) யா/ இளவாலை கன்னியர் மடம் ம. வி. இளவாலை.

2ம் இடம்:— செல்வன அ. எட்வேட் நிக்ஷன் சோசை, மன்/ புனித ஆனாள் ம. வி. வங்காலை.

3ம் இடம்:— செல்வி அஞ்சலா டார்சினி மனோகரன் (ஆண்டு 8) யா/இளவாலை கன்னியர் மடம் ம. வி. இளவாலை.

ஆறுதல் பரிசுகள்:-

I செல்வி மரியநாயகம் மேரி லியோனி வதனா (ஆண்டு12) யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் ம. வி. இளவாலை.

II செல்வி மொறின் பப்ரிஸ்ரா றதினி சுவாம்பிள்ளை (ஆண்டு 9) யா/இளவாலை கன்னியர் மடம் ம. வி. இளவாலை.

III செல்வன யோ. அன்ரனி யூட் (ஆண்டு 9 D) யாழ்/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

IV செல்வி மேரி சுபாஜினி, (ஆண்டு 10) புனித பற்றிமா றோ. க.த.க. பாடசாலை கிளிநொச்சி.

V செல்வி அ. அன்ரனற் வேணி (ஆண்டு 13) வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம வி. வவுனியா.

VI செல்வி R அன்ரனி மாதா (ஆண்டு 9) கொத்தணி மூலாதாரப் பாட சாலை செட்டிகுளம்.

VII செல்வி மாலினி சண்முகம் (ஆண்டு 11) கிளி/இந்து மகாவித்தியாலயம் கிளிநொச்சி.

VIII செல்வி செ. கீதா (ஆண்டு12) கிளி/இந்து மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

XI செல்வன் பி. கெயில் பிறைற்லி (ஆண்டு 10) கிளி/ மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

X செல்வன் க. கணேசன் வவுனியா மகாவித்தியாலயம் வவுனியா.

தத்தமது பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தற் கடிதத்துடன் மேற்குறிப்பிட்ட பரிசுகளுக்குரியவர்களும், 1989 ஆண்டுக்குக்குரிய உதவிக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்த பங்குத் தந்தையர்களும் இத்திட்டத்தின் கிளைச் செயலாளரான திரு சி. ஸ்ரனிஸ்லாஸ், புனித. பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்களுக்கான பரிசுத் தொகையையும், உதவிக் கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

BEAS

## 25-ம் வருட நினைவு தினம் — 21-ம் வருட நினைவு தினம்



அ. சவிரிமுத்து
மறைவு: 03—01—1964



ச. பிலிப்பாச்சிப்பிள்ளை
மறைவு: 27—01—1968

விண்ணக வாழ்வில் வெள்ளி விழாக் கொண்டாடும் அன்புத் தந்தையே,

வெள்ளி விழாக் கொண்டாடக் காத்திருக்கும் அருமைத் தாயே,

தங்கள் இருவரின் ஆன்மாக்களும் விண்ணகத்தில் இறைவனிடம் இளைப்பாற இறைஞ்சுகின்றோம். அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் 27—1—1989 காலை 6·30 மணிக்கும்; அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் 9 02—1989 மாலை 4-30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் திவ்விய பலிகளில் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

## தியாக உள்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தன்மையுள்ள மனிதனாக இருக்கின்றார். இப்படியான ஒரு நல்ல மனதை நான் புண்படுத்தலாமா? நான்எனது இலட்சியத்திற்காக எனது விருப்பப்படி நடந்தால் இவருடைய வாழ்க்கை என்னவாகும் விடைகாணமுடியாது தத்தளித்துக்கொண்டிருந்தாள். இந்தத் தத்தளிப்பு இருவருக்கிடையேயும் ஒரு நீண்ட மௌனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இதுவரை அவனின் பெருந்தன்மை பற்றி சிந்தித்த வசந்திக்கு அவனின் தியாக உள்ளம் அவளைத் தடுமாறவைத்தது. வேறு ஆணாக இருந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும். அவள் சிந்தனை வசப்பட்டாள். இறுதியில்அவள் ஓர் முடிவுக்கு வருகின்றாள்.

"எனது கழுத்தில் எப்பொழுது உங்கள் கையால் தாலி கட்டினீர்களோ, அதுமுதல்உங்கள் மனைவியாகிவிட்டேன். அதனை நான் விலக்கிக்கொண்டாலும், உங்கள் மனைவிதான். எனவே எனது நலனுக்காக என்னைவிடத் தியாக உள்ளம்கொண்ட உங்களது வாழ்க்கையை நான் பாழாக்க விரும்பவில்லை. உங்கள் மனைவியாக உங்களுக்குப் பணிவிடை செய்வதில் நான் திருப்தி அடைகின்றேன். உங்கள் பண்பட்ட தியாக உள்ளத்தின் முன்னால் என்னால் தலை நிமிர்ந்து நிற்கக்கூட முடியவில்லை.'' உணர்ச்சிவசப்பட்டவளாக அவள் வார்த்தைகளை விதைத்துக்கொண்டு சென்றாள். வசந்தியின் இந்த மாறுதல் சுகுமாருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததும், அவள் தமிழ்ப் பண்பாட்டை மதித்துத் தாலிக்குக் கொடுக்கும் மதிப்பை எண்ணி அவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவனாக!

''வசந்தி, நீ எந்த மதத்தில் பற்றுதல் வைத்தாயோ, அந்த மதத்தையே நானும் பின்பற்றத் தீர்மானித்துவிட்டேன். கொஞ்சநாள்பொறும் நாங்கள் இருவரும் மாதா கோவிலுக்குச் சென்று பாதரிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொள்வோம். எங்களுக்கு இறைவன் கொடுக்கும் மழலைச் செல்வங்களைக்கொண்டு நீ கொண்ட இலட்சியத்தை நிறைவேற்றுவோம்.''

அவள் காதுகளையே அவளால் நம்பமுடியவில்லை.

## முதலாம் வருட நினைவஞ்சலி



அந்தோனிப் ஸ்ரீ பீற்றர்

மலர்வு 29-04-1940 — உதிர்வு 01-03-1988

ஆண்டு ஒன்று ஓடிட
தாங்கிட முடியாத் துயரில்
தவித்திடும் தந்தாய் நாங்கள்
ஆண்டவன் கருணை நாடி
அனுதினம் செபிப்போம் உமக்காய்

இவரின் ஆன்ம சாந்திக்காக கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் 01-03-88 அன்றுகாலை 6-15 இரங்கல் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்.
கரம்பொன் கிழக்கு
ஊர்காவற்றுறை A/12

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



எலிசம்மா செபமாலை

மலர்வு 10-5-1910 — உதிர்வு 30-1-1988

ஆண்டொன்று சென்றாலும் உமது அன்புருவம் மறையாது எம்மை அன்போடும் பண்போடும் ஆதரித்து காப்பாற்றிய அன்புத்தெய்வமே, உம் ஆன்ம சாந்திக்காக இறை இரக்கத்தை வேண்டுகிறோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 28-1-1989 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
யாழ்ப்பாணம். A/14

## 25-வது ஆண்டு நினைவஞ்சலி



வஸ்தியாம்பிள்ளை மேரிப்பிள்ளை
தோற்றம்: 12—10—1902
மறைவு: 02—02—1964



லோ. வஸ்தியாம்பிள்ளை
தோற்றம்: 25 06—1894
மறைவு: 25—03—1964

தலைமகன் தன்னை யேசு இறைமகன் பணிக்களித்த
தங்கமனம் படைத்த தங்கமாவும் பஸ்ரியனும்
நிலையில்லா உலகை விட்டு இறைவனின் பாதம் சேர்ந்த
ஈர்பத்து ஐந்து ஆண்டின் நினைவுறு நாளே இன்று.
இறைவனுர் இணைத்த தங்கம் இறந்தொரு மாதத்துள்ளே
கணவனுர் நீரும் எம்மைக் கண்ணீரில் மிதக்கவைத்தீர்
மனைவியார் செய்தபணி மற்றவர் செய்யாரென்ற
மனதுடன் எம்மை விட்டு மறைந்து நீர் சென்றீரையா.
எத்தனை ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
பெற்றோராம் உம் நினைவு என்றுமே மாறாது
கத்தனின் பாதமதில் பக்தியாய் வாழுகின்ற
சுத்தர்களோடு நீங்கள் நித்தியம் வாழுவீரே.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 2-2-1989 பி. ப. 5 மணிக்கு அவர்கள் மகன் வண. பிதா வ. இராயப்பு அடிகளாரால் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கபப்படும். பலியில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

துயருறும்:
797, கடற்கரை வீதி, பாஷையூர். — மக்கள், மருமக்கள்.

## விண்ணுலக வாழ்வின் 31 ம் நாள் நினைவு அஞ்சலி



மிக்கேற்பிள்ளை அன்னம்மா

இறைவா உமது பதமடைந்த அடியாள் மிக்கேற்பிள்ளை அன்னம்மாவின் ஆன்மாவை நல்ல இடமளித்து இளைப்பாற்றியருள வேண்டுமென்று உம்மை இரந்துமன்றாடுகின்றோம். இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 31-1-89 செவ்வாய்க்கிழமை புனித அன்னாள் ஆலயத்தில் 6-30 மணியளவில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்

ஈச்சமோட்டை வீதி
யாழ்ப்பாணம். A/16

பாதுகாவலன்
PATHUKAVALAN

## தலைமன்னார்ப் பங்கில் ஒளிவிழா

கடந்த சில ஆண்டுகளுக்குப் பின், இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா தலைமன்னார்ப் பங்கில் நடைபெற்றுள்ளது. இந்திய அமைதி படையின் அனுமதியோடு புதிய பங்குத்தந்தை அருள்திரு. செபமாலை அடிகளார் கிறிஸ்து பிறப்புத் திருவிழிப்பு வழிபாடுகளை நடத்தித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இம்முறை நடத்தப்பட்ட நள்ளிரவு ஆராதனைகள் மக்களிடையே உற்சாகம் ஊட்டக்கூடியதொன்றாக அமைந்தது. மக்கள் பக்திப் பரவசத்துடனும் உற்சாகத்துடனும் வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள். கிறிஸ்து பிறப்பை மேலும் சிறப்பிக்க ஒளி விழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. ஒளிவிழா நிகழ்ச்சிகள் யாவும் மக்கள் மத்தியில் புத்துயிரை ஏற்படுத்தக்கூடியதாகவும் எமது இருண்ட சமுதாயத்தை ஒளியேற்றக் கிறிஸ்து வந்துவிட்டார் என்பதை எடுத்துக்காட்டும் முகமாகவும் அமைந்திருந்தது. ஒளியாக வந்த கிறிஸ்துவின் அடையாளமாக முதலில் பங்குத்தந்தை ஒளி விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். நிகழ்ச்சியை மேலும் சிறப்பிக்க பக்தி சபைகளும் பாடசாலை மாணவ மாணவிகளும் கலைநிகழ்ச்சிகளை வழங்கினர். ஈற்றில் கிறிஸ்மஸ் தாத்தா நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். இவ்வைபவத்திற்கு ஆலய பாடகர் குழுவினரும், இளைஞர்களும் பங்குத் தந்தையுடன் ஒத்துழைத்து நிகழ்ச்சிகளை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல்: P. எமில்

## வங்காலையில் கியூறியாக் கூட்டம்

வங்காலை புனித ஆனாள் ஆலயத்துக்குச் சேர்ந்த மரியாயின் சேனைகளும், வஞ்சியங்குளம் புனித இராயப்பர் ஆலயத்தைச் சேர்ந்த மரியாயின் சேனைகளும் 17. 12. 88 சனிக்கிழமை காலை 9 மணியளவில் கியூறியாக்கூட்ட முடிவில் ஆண்டு விழாக் கொண்டாடினர்.

விழாவில் கலந்து உரையாற்றிய பங்குத்தந்தை அருளதிரு. அருள்நாதன் அடிகள் இன்று மரியாவின் சேனையாளர் அன்னையை மகிமைப்படுத்த ஆண்டு விழாக் கொண்டாடுவது போற்றுதற்குரியது.

மரியன்னையின் தியாக வாழ்வு, தியான வாழ்வும் எமமிடத்தில் மலரவேண்டும். சேனையாளர் தங்களைத் தூய்மைப் படுத்திச் சமுதாயத்தைப் புதுப்பிக்கவும், சமாதானத்தை வளாக்கவும் வேணடும் எனக் கேட்டுக்கொண்டார்.

'விழாவைச் சிறப்பிக்க எத்தனை நாவால்துதிப்பேன்' என்ற வில்லிசை மரியன்னையின் சிறந்த பண்புகளை விளக்கியது. அன்னையின் தாழ்ச்சி, கருணை, கற்பு, சாந்தம், நீதி இவற்றை நற்செய்தி நிகழ்ச்சிகளோடு எடுத்துக்காட்டினார்கள். கிறிஸ்தவர்களின் சகாயம் சைனியத்தார். வஞ்சியங்குளம் 'வேத சாட்சிகளின் இராக்கினிசேனை 'அருள்தாரும் அம்மா' என நடனத்தால் அன்னையை மகிமைப்படுத்தியது.

'ஒளி பிறந்தது' நாட்டிய நாடகம் வங்காலைப் பாலர் சைனியப் 'பரலோக வாசல்' அளிததது. தொடர்ந்து 'திருந்திய உள்ளம்' நாடகம் 'ஜெருசலேமின் மாட்சிமை' வங்காலை இளைஞர் சைனியத்தால் அரங்கேற்றப்பட்டது. மிகவும் ஆர்த்தமுள்ளதாக மரியன்னையின் வல்லமையை எடுத்துக்காட்டுவதாக நிகழ்ச்சிகள் அமைந்து பாராட்டுக்கள் பெற்றது குறிப்பிடத்தக்கது. தலைவர் திரு. S. அல்போன்ஸ் சில்வா நன்றி கூறி, கூட்டமுடிவுச் செபத்துடன் நிறைவெய்தியது.

வீ. ஏ. எல்.

## நூரளைச் செய்திகள்

நுவரெலியா கத்தோலிக்க இளைஞர் இயக்கத்துடன் நுவரெலியா சென் வின்சன்ட் டி போல் இயக்கம் ஒன்றிணைந்து முதியோர் தினமொன்றை ஒழுங்குசெய்தன. வண. கிங்ஸ்லி சில்வா தலைமையில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் சுமார் 70 ஆண், பெண் முதியோர்கள் கலந்து கொண்டனர் திருப்பலிப்பூசையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் மதியபோசனமும், வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆடிப்பாடி மகிழ்ந்த முதியோர்கள் தாங்கள் பல வருடங்களுக்குப் பின் தங்களின் நண்பர்களைக் கண்டதாகவும், கடந்தகால நிகழ்ச்சிகளை பகிர்ந்துகொண்டதாகவும் கூறினர். பங்குத்தந்தை அவர்கள் இயேசுவின் திரு இருதயப்படங்களைப் பகிர்ந்தளித்தார். கத்தோலிக்க இளைஞர் இயக்க தலைவர், வின்சன்ட் டி போல் தலைவர், ஆகியோரின் நன்றியுரைகளுடன் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

அனுப்புபவர்: S. வின்சன்ற்.

★

நுவரெலியா கத்தோலிக்க இளைஞர் சங்கத்தினரால் ஜனவரி மாதம் 1-ம் திகதி 1989 ம் ஆண்டு 9. 30 காலை திருப்பலியில் ஒரு இந்து சமய வாலிபனுக்கு சக்கர வண்டியொன்று வழஙகப்பட்டது. உடபுசல்லாவைச் சேர்ந்த இந்த இளைஞன் (C. Y. O) சங்கத்தினருக்கு நன்றிகளை கூறியதுடன் தான் அதை வியாபாரத்திற்காக பயன்படுத்தப் போவதாகவும், கூறினர். ஒரு விபத்தில்தான் சிக்கி சுமார் 5 வருடங்களாக நடக்க முடியாமல் துன்புற்றதாகவும், தான் தற்போது இச் சக்கர வண்டியின் உதவியுடன வியாபாரமொன்றை ஆரம்பிப்பதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்.

அனுப்புபவர்: S. வின்சன்ற்


## ஓவியப் போட்டி-3 "யேசுவின் உருமாற்றம்"



முதலாமிடம்:- திரு. சிங்கராயர்
8-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.



← இரண்டாமிடம்: மலர்விழி கத்தையா,
தி. கு. க. மடம், யாழ்ப்பாணம்.



மூன்றுமிடம்:- அ. கொலின்ஸ் டொனல்ட்
கடுத்தனலை, இளவாலை.

**போட்டி 4 'யேசு சிலுவை சுமத்தல்' அனுப்பவேண்டிய இறுதிநாள் 20-2-89 அடுத்த போட்டி 3-3-89**

### பொது நிலையினரினதும் குடும்பத்தினதுமான ஆணைக்குழு நடாத்தும்

## சிறப்புப் போட்டி
## "குட்டிக்கதைகள்"

எழுத்தாளர்களே! உங்கள் திறமைக்கு களம் — இதோ! உங்கள் படைப்பில் நற்செய்திகள் பரப்பும் கருவாக சிறுவர்களுக்கு உகந்ததான "குட்டிக்கதைகள்" எழுதி அனுப்பி பரிசில்களைத் தட்டிக்கொள்ளுங்கள்.

சிறப்பு பரிசில்களைப் பெற நிபந்தனைகள் இதோ:

கரு:- நற்செய்தி சிந்தனைகள்

(1) ஒரு பக்க புல்ஸ்காப் தாளில் அடங்கிய குட்டிக்கதை.
(2) ஒருவர் எத்தனையும் அனுப்பலாம்.
(3) நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
(4) போட்டி இறுதி நாள் —15-02-89

அனுப்பவேண்டிய முகவரி — "குட்டிக்கதைகள்"
தலைவர்,
பொது நிலையினர் ஆணைக்குழு,
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பதிவு இல: QB / 100158 / 81

## புனிதர் வழியில்

ஜன — 31 :
புனித போஸ்கோ அருளப்பர்.

தூரின் மறைமாவட்டத்தில் பக்கி எனுமிடத்தில் 1815 ஆம் ஆண்டு பிறந்தார். வறுமைச் சிறுவனாக வாழ்ந்த இவர் குருவாகி, இளைஞர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தார். பின் 1888 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் தேதி தூரினில் மரித்தார். 1934 புனிதராக உயர்த்தப்பெற்றார்.


பெப் — 3 :
புனிதபிளாசியுஸ் :
4 ம் நூற்றாண்டில் புனிதர் ஆர்மீனியாவில் உள்ள செபாஸ்தே நகர் ஆயராக இருந்தார். 6 — 9 ம் நூற்றாண்டுகளில் புனிதரின் பக்தி திருச்சபையில் மேலோங்கியது.

புனித ஆன்ஸ்காரியுஸ் :
புனிதர் பிரான்சில் 9 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றினார். கோர்பேதுறவற மடத்தில கல்விபயின்றார். புனிதர் ஜெர்மனியில் ஹாம்பர்க் என்னும் நகரத்து ஆயராகத் தெரிந்துகொள்ளப்பட்டு. திருத்தத்தை 4 ம் கிறகோரியாரால் உறுதி செய்யப்பட்டு, டென்மார்க், ஸ்வீடன் நாடுகளுக்குபாப்புவின் தூதராகப் போனார். 865 ஆண்டு பெப்ரவரி 3ம் நாள் ஜேர்மனியில் பிரேமா எனுமிடத்தில் இறந்தார்.

எஸ். ஏ. குமார்

### 2-ம் வருட நினைவஞ்சலி

வ. அந்தோனிப்பிள்ளை
(துரைராசா)



தோற்றம் 13-9-1917 மறைவு 02-02-1987

இரக்கம் மிகுந்த இறைவா நீரே இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 3- 2- 89 வெள்ளிக்கிழமை மாலை 5-15 மணிக்கு கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், நண்பர்கள்.

A/19

## உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்